தரம் 06

# தமிழ் மொழியும் இலக்கியமும்




அலகு 04

குரங்குச்சேட்டை

Mrs U.Sethupathy BA(Hons),PGDE.
NP/J/Valvai Hindu Ladies College

தரம் 06 தமிழ் மொழியும் இலக்கியமும் குரங்குச்சேட்டை



# குரங்குச்சேட்டை


## நுழைவாயில்

- குரங்குச்சேட்டை எனும் கதை நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் இலங்கை வளம் எனும் பகுதியில் இடம்பெற்றிருக்கின்ற பாடல்களை மையமாகக்கொண்டு எழுதப்பட்டுள்ளது.

- குரங்குகள் புரிகின்ற சேட்டைகளை கதை கூறிநிற்கின்றது.

- இரண்டு சேட்டைகள் பிரதானமாக கதையிலே சொல்லப்பட்டிருக்கின்றன

1. கருங்குழவிக் கூட்டை கல்லால் எறிந்து அக்குளவிகளிடமே கொட்டு வாங்கி நடுக்கமுற்ற குரங்கின் சேட்டையும்
2. மருதமர நிழலிலே குரங்குகள் சேர்ந்து காவடியாடி புரிந்த சேட்டையும் மாணவர் மனங்கொள்ளும் வகையில் கூறப்பட்டிருக்கின்றன.





## பல்தேர்வு வினாக்கள்

மிகப்பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

**மரங்களடர்ந்த காட்டில் வானளாவிய மரங்கள் நெருங்கிப் பின்னிக்கிடக்கின்றன. இதில் 'காட்டில்' என்பதன் ஒத்தபதம்**

- **மரத்தில்**
- **வனத்தில்**
- **வானத்தில்**
- **வானகத்தில்**

கல்லுப்போன திசைவழியே ஒரு குழவி வேகமாக வந்தது. இங்கு ‘வேகமாக’ என்பதன் ஒத்தபதம்

- தாமதமாக
- சுறுசுறுப்பாக
- கோபமாக
- விரைவாக

பெரிய குளவிக்கூடு தொங்குகின்றது. இங்கு ‘தொங்குகின்றது’ என்பது

பெயர்ச்சொல்

இடைச்சொல்

வினைச்சொல்

உரிச்சொல்

**அக்குளவிக்கூட்டை ஆண்குரங்கு கண்டது. இங்கு எழுவாய்**

**கண்டது**

**குளவிக்கூடு**

**ஆண்**

**ஆண்குரங்கு**

**மந்திகள் மருதமர நிழலில் குந்திக் காவடியெடுத்து ஆடுகின்றன. இங்கு 'மந்தி ' என்பது**

புலி

சிங்கம்

கரடி

குரங்கு

மலேரியாக் காய்ச்சல் வந்தவர்களைக் கண்டிருக்கிறீர்களா?
இது எவ்வகை வாக்கியம்

வினாவாக்கியம்

கூற்றுவாக்கியம்

ஏவல்வாக்கியம்

மெய்ப்பாட்டு வாக்கியம்

குரங்குச்சேட்டை என்பதைப் பிரித்தெழுதினால்

குரங்குச்+சேட்டை

குரங்கு+ச்சேட்டை

குரங்கு+சேட்டை

குரங்+குச்சேட்டை

மந்திகள் மருதமர நிழலில் குந்திக் காவடியெடுத்து ஆடுகின்றன. இங்கு ‘மந்தி ’ என்பது

குரங்கு

பெண்குரங்கு

ஆண்குரங்கு

கடுவன்



## பொருத்தமானதை இனங்கண்டு தொடர்புபடுத்துக.

| | |
|---|---|
| 1.மரக்கிளை | 1.வீசியது |
| 2.ஆண்குரங்கு | 2.குளவிக்கூடு |
| 3.கல்லால் | 3.குலைப்பன் நடுக்கம் |
| 4.கருங்குளவி | 4.கடுவன் |
| 5.கூனி நடுங்கல் | 5.மலேரியாக் காய்ச்சல் |
| 6.குளிர்சுரம் | 6.குளவி வகை |
| 7.மந்திகள் | 7.ஒலி |
| 8.சப்தம் | 8.ஊளையிடல் |
| 9.நரி | 9.இசைக்கருவி |
| 10.காகளம் | 10.காவடியாட்டம் |

## 02. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் ‘சரி’ எனவும் பிழையாயின் ‘பிழை’ எனவும் குறிப்பிடுக.

1.மரத்தில் தொங்கியகூடு கருங்குழவிக்கூடு ( சரி )

2.ஆண்குரங்கு மந்தி எனப்படும் ( பிழை )

3.குரங்குகள் காவடியை தா,திமி,திமித்தியென ஆடுகின்றன ( சரி )

4.மந்திகள் குந்திக் காவடியெடுத்து ஆடுமிடம் மாமரநிழல் ( பிழை )

5.குளவிகள் கொட்டியதால் குரங்கு சிரித்தது ( பிழை )

6.குரங்கின் நடுக்கத்துக்குரிய உவமானம்

குளிர்சுரத்து நடுக்கமாகும் ( சரி )

7.வாத்தியங்களின் ஓசைபோல இருப்பது

குரங்குகளின் இரைச்சலாகும் ( பிழை )

8.இலங்கை வளம் பாடியவர் நவாலியூர்

சோமசுந்தரப்புலவர் ( சரி )

9.வாத்தியங்கள் இசைப்பது நரியாகும் ( சரி )

10.மாமருது எனக் குறிப்பிடப்படுவது

மருதமரமாகும் ( சரி )

## சுருக்கமான விடை எழுதுக

1.குரங்கின் சேட்டை யாது?

கல்லால் குளவிக் கூட்டுக்கு எறிந்தது

2. குரங்கின் சேட்டைக்கு கிடைத்த பரிசு யாது?

குளவியிடம் கொட்டு வாங்கியமை

3. மரத்தில் தொங்குகின்ற குளவிக் கூட்டின் பெயர் என்ன?

கருங்குளவிக்கூடு

4. நரியின் சத்தமிடுகை எவ்வாறு அழைக்கப்படும்?

ஊளையிடுதல்

5. குரங்குச்சேட்டையில் கூறப்படும் இசைக்கருவிகள் எவை?

சங்கு, காகளம்





நன்றி